# தமிழ் நாடு தகவல் ஆணையம்

காமதேனு கூட்டுறவு சிறப்பங்காடி முதல் தளம்,, புது எண் 378, அண்ணா சாலை,
தேனாம்பேட்டை சென்னை-600018. (தபால் பெட்டி எண் 6405 தேனாம்பேட்டை)
*தொலைபேசி எண் 24312841.*

## வழக்கு எண்.13292/விசாரணை/2009

<u>விசாரணை நடைபெற்ற நாள் 22.09.2009.</u>

| | |
|---|---|
| முன்னிலை: | முனைவர் (திருமதி) சாரதா நம்பி ஆரூரன், எம்.ஏ.,எம்.ஃபில்,,பி.எச்,டி., மாநில தகவல் ஆணையர் |
| மனுதாரர்: | திரு T.பாலாஜி, பிளாட் எண்.15–A/90, பிரித்திவிப்பாக்கம், 3–வது அவென்யு, அம்பத்தூர், சென்னை – 600 053. |
| பொது அதிகார அமைப்பு: | பொதுத் தகவல் அலுவலர், பணியாளர் மற்றும் நிர்வாகச் சீர்திருத்தத் துறை, தலைமைச் செயலகம், சென்னை – 600 009. |

*****

மனுதாரர் திரு T.பாலாஜி மற்றும் பொதுத் தகவல் அலுவலர் திரு C.மாணிக்கம், அரசு சார்புச் செயலாளர், பணியாளர் மற்றும் நிர்வாகச் சீர்திருத்தத் துறை, தலைமைச் செயலகம், சென்னை இன்று (22.09.2009) இவ்வாணையத்தில் நடைபெற்ற விசாரணைக்கு வந்திருந்தனர்.

மனுதாரர் 30.09.2008 அன்று பொதுத் தகவல் அலுவலர், தலைமைச் செயலர் அலுவலகம், சென்னை அவர்களிடம் உச்ச நீதிமன்றத்தில் பிறப்பிக்கப்படுகின்ற சட்டங்களும், ஆணைகளும் உரிய முறையில் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றதா ? என்பதைத் தகவலாகக் கேட்டு மனுச் செய்துள்ளார். 13.10.2008 அன்று தலைமைச் செயலர் அலுவலகத்திலிருந்து பொதுத் தகவல் அலுவலர், பொதுப் பணித்துறை, தலைமைச் செயலகம் அவர்களுக்குத் தகவல் அளிக்கும்படி அனுப்பப்பட்டுள்ளது. தகவல் பெறாததால் மனுதாரர் 13.11.2008 அன்று துறைக்கு மேல் முறையீடும் 18.12.2008 அன்றும் 15.06.2009 அன்றும் ஆணையத்திற்கு மேல் முறையீடும் செய்ததன் அடிப்படையில் வழக்கு இன்று (22.09.2009) விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

06.05.2009 அன்று மனுதாரருக்கு அளிக்கப்பட்டுள்ள பதில் கடிதத்தில் மனுதாரரின் மனு தகவல் அறியும் உரிமைச் சட்ட எல்லைக்குள் வராது என்று தகவல் அளிக்கப்பட்டுள்ளது. இன்றைய விசாரணையில் மனுதாரரிடம் இது குறித்து விசாரித்தபோது, உச்ச நீதிமன்றத்தின் ஆணைகளை ஏன் நிறைவேற்றவில்லை என்பது தன்னுடைய கேள்வி அல்ல எனவும், ஆணைகள் நடைமுறைப்படுத்தப் படுகின்றதா ? இல்லையா ? என்பது குறித்துத் தகவல் தந்தால் போதுமானது என்றும் கூறினார். மனுதாரரின் மனு குறித்துப் பணியாளர் மற்றும் நிர்வாகச் சீர்திருத்தத் துறைப் பொதுத் தகவல் அலுவலரிடம் விசாரிக்கப்பட்டது.

பொதுவாக உச்ச நீதிமன்றமோ, அரசோ ஆணைகள் பிறப்பிக்கப்படுகின்ற போது அவைப் பின்பற்றப்படுகின்றனவா ? இல்லையா ? என்பது குறித்துத் தகவலாகத் தங்களிடம் இல்லை என்பது தெரிவிக்கப்பட்டது. அரசு கோப்புகளில் இல்லையென்றாலும் மின்னணு முறையில் (Web site) எதுவும் தகவல் இருக்கக் கூடுமென்று மனுதாரர் தெரிவித்தார். இந்நிலையில் கீழ்க்கண்ட ஆணை பிறப்பிக்கப்படுகிறது.

மனுதாரர் கேட்டுள்ளபடி ‘‘உச்ச நீதிமன்றத்தின் ஆணைகள் உரிய முறையில் நடைமுறைப் படுத்தப்படுகின்றன‘‘ என்பது தகவலாக அரசு கோப்புகளில் இருந்தால், அத்தகவலை மனுதாரருக்கு அளிக்கும்படியும், அத்தகவல் இல்லையென்றால் அதனைத் தெளிவாக மனுதாரருக்கு இவ்வாணை பெறப்பட்ட 10 நாட்களுக்குள் தெரிவித்து ஒப்புகைப்

பெற்று விவரத்தை ஆணையத்திற்குத் தெரிவிக்கும்படியும் பொதுத் தகவல் அலுவலருக்கு ஆணையிடப்படுகிறது.

**ஒப்புதல் பெறப்பட்ட நாள் 23.09.2009** **தமிழ்நாடு தகவல் ஆணையம்**
**ஆணையத்தின் ஆணைப்படி**

**(சு.மோகன தாஸ்)**
**உதவி பதிவாளர்**

பெறுநர்

<u>**வழக்கு எண்.13292/விசாரணை/2009**</u>
பொதுத் தகவல் அலுவலர்,
பணியாளர் மற்றும் நிர்வாகச் சீர்திருத்தத் துறை,
தலைமைச் செயலகம்,
சென்னை – 600 009.

திரு T.பாலாஜி,
பிளாட் எண்.15–A/90,
பிரித்திவிப்பாக்கம்,
3–வது அவென்யு,
அம்பத்தூர்,
சென்னை – 600 053.

*"ptl"*